பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# பச்சைமலை பழங்குடியினரின் இறப்பு சார் சடங்கு முறைகள்

ரா. பிரவின்குமார்
முனைவர்ப் பட்ட ஆய்வாளர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். மின்னஞ்சல்: pr9556754@gamail.com
நெறியாளர் : முனைவர் இரா. இந்து
பேராசிரியர் (ம) தலைவர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**ஆய்வுச் சுருக்கம்**

பச்சைமலைப் பழங்குடியினரின் இறப்பு மற்றும் அந்திமச் சடங்கு முறைகளைப் பண்பாடு மற்றும் மானுடவியலின் நோக்கில் ஆராய்வதன் மூலம், பழங்குடியினரின் வரலாற்றுச் செய்திகளையும், அவற்றில் காணப்படும் உறவுமுறை, பண்பாட்டு மாற்றங்கள், அடையாளங்களை அடுத்து வரும் தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்வதும் அச்சடங்கு முறைகள் காலத்திற்கேற்ப எவ்வாறு நடைமுறைகள் மாறியுள்ளன என்பதையும் பதிவுசெய்வது அவசியமாகிறது.

**திறவுச்சொற்கள்**

பச்சைமலை - மலையாளி பழங்குடியினர் – ஊர்மக்களின் பங்கு – குளிப்பாட்டுத் தளம் - அந்திமச் சடங்கு - சந்து - கருப்பு

**அறிமுகம்**

மனிதனானவன் ஒருமைப்பாடு, ஒழுங்கு, குறிக்கோள் ஆகியவற்றுடன் வாழத் தலைப்பட்ட போது, தனக்காகவும் தன் சமூகத்திற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடே சடங்குமுறையாகும். நாடோடிகளாக வேட்டையாடியத் திரிந்த மனிதன் எவ்வாறு குழுவாக, கூட்டமாக வாழத் தொடங்கினார்களோ அப்பொழுதே சடங்கு முறைகளும் வளர்ச்சிப் பெற ஆரம்பித்து விட்டது. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு படிநிலைகளைக் கடந்து வருகின்றனர். அவர்களின் ஒவ்வொரு படிநிலைகளிலும் முக்கிய நிகழ்வுகள் உள்ளடக்கியதாகவும், நினைவூட்டலின் பலனாகவும் சடங்குமுறைகளைக் காலம் காலமாக மக்கள் செய்து வருகின்றனர். வாழ்க்கை வட்டச் சடங்குகள் இடத்திற்கு இடம், சமுதாயம், சாதிகள் எனப் பல மாறுபாடுகளுடன் காணப்பட்டு வருகின்றது. அவற்றிலும் பச்சைமலைப் பழங்குடியினரின் சடங்கு முறைகள் சமவெளி மக்களை விட, சற்று மாறுபட்டுத் தங்களின் முன்னோர்களின் நம்பிகைகளைக் காலங்காலமாகத் தொன்றுத்தொட்டுப் பின்பற்றி வருகின்றனர். அம்மக்களின் இறப்புச் சடங்கு சார்ந்த செய்திகள், முன்னோர்களுக்கு எடுக்கப்படும் சந்து விக்ரது அல்லது கருப்பு எடுக்கும் நிகழ்வுகளையும் இக்கட்டுரையின் வழி ஆராயப்படுகிறது.

**பச்சைமலைப் பழங்குடியினர் அறிமுகம்**

கிழக்குத் தொடச்சி மலைகளில் ஒரு பகுதியாக விளங்கும் பச்சைமலை, தமிழகத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள மலைத்தொடராகும். தமிழகத்தின் திருச்சி, சேலம், பெரம்பலூர் என மூன்று மாவட்டங்களிலும் பரந்துபட்டுப் காணப்படும் பச்சைமலையில் அரியவகை தாவரங்களும், விலங்கினங்களும் வாழ்ந்து வருகின்றன. இம்மலையானது கோம்பை நாடு, வண்ணாடு, தென்புறநாடு, ஆத்திநாடு என நான்கு நாடுகளைக் கொண்டதாகும். இங்கு வாழும் மக்கள் தங்களைப் பச்சைமலை மலையாளிகள் எனவும், மலைவெள்ளார், காஞ்சி மண்டலத்தர்,

மலை கவுண்டர், காரளான் கவுண்டர் போன்ற பெயர்களில் தங்களை அழைத்துக் கொள்கிறர்கள்.



இவர்களுடைய இனக்குழு பெயருடன் இணைந்துள்ள மலையாளிகளுக்கும் இவர்களுக்கும் இனக்குழு வழியிலோ, மொழியின் வழியிலோ எவ்வித நேரடி உறவும் இல்லை. அம்மக்களுடைய இனக்குழு பெயருடன் வழங்கப்படும் 'மலையாளி' என்னும் சொல்லாட்சி, மலையில் வாழ்பவன் அல்லது வசிப்போர் என்ற பொருண்மையின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். முகமதியர் ஆட்சித் தொடங்கிய காலத்தில் காஞ்சிபுரத்தில் இருந்த மக்கள் பச்சைமலைகளில் குடியேறி வசிக்கத் தொடங்கினார்கள் என்ற கதைகளும் இம்மக்களிடம் காணப்படுகின்றது.

**இறப்பில் ஊர்மக்களின் பங்கு**

கூட்டமாகவும் குழுவாகவும் வாழ்வதற்கான காரணம், இறந்தவர்களின் இறுதி நிகழ்வுகளில் இறந்தவரின் குடும்பத்துடன் ஒன்றுபட்டு, அவர்களுடன் முன்நின்று இறந்தவரின் உடலை அடக்கம் செய்வது முதல் இறுதி நிகழ்வு வரை உதவிகள் செய்பவர்கள் ஊர்மக்களாவர். பச்சைமலைக்கு இறந்த செய்தி வந்தால் முதலில் ஊர் மூப்பனுக்குத் தெரிவிப்பார்கள். பிறகு, அவர் ஊர்த் தலைவரிடம் செய்தி கூறுவார். இருவரும் ஊரில் செய்திக் கூறும் கங்காணியிடம் சொல்லி அனுப்புவதும், அவர் ஊரில் உள்ள மக்களுக்குத் தண்டால் அடித்து செய்தியை மக்களுக்குத் தெரிவிப்பார். பச்சைமலையில் வாழும் மக்கள் ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்பதால், இறந்தவர்க்கான குழிகளை மட்டும் ஊர்மக்கள் வெட்டுகின்றனர்.

பிறகு, சடங்கு செய்வதற்குத் தேவைப்படும் பொருட்களை ஊர்பொதுமக்கள் வாங்கித் தருகின்றனர். செங்காட்டுப்பட்டி, சோபனபுரம் சார்ந்த குடிவேலை செய்பவர்கள் மலையில் வாழும் மக்களுக்கும் இறுதி காரியத்தைச் செய்வதற்கு சமவெளிப் பகுதிகளில் இருந்து அழைக்கப்படுகின்றனர். நாவிதர், வண்னா போன்ற சமூக மக்களை வரவழைத்து இறுதி நிகழ்வுகளை நடத்துகின்றார்கள். பிறகு, ஊர்த்தலைவர் இவர்களுக்குத் தினக்கூலியாக 5000 வரை தரப்படுவதாகக் கூறப்படுகிறது. வெளியூர்களில் இருக்கும் உறவினர்களுக்குச் செய்தியை முறையாக அனுப்புவதும், அம்மக்கள் வந்து செல்லும் அனுசரித்துச் செல்லும் பண்பும் ஊர்த்தலைவனின் கடமையாகப் பார்க்கப்படுகிறது.

**உயிர் பிரிந்தவுடன் செய்யும் சடங்கு முறைகள்**

இறப்புச் சடங்கு முறை என்பது காரணங்களால் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு நிகழ்வுகளிலும் முன்னோர்களை வழிபடுவதன் அடிப்படையில் இறப்புச் சடங்குகளை நடத்தி வருகின்றனர்.

**விளக்கேற்றுதல்**

உடல்நிலை பாதிக்கப்பட்டவராக இருந்தால் வீட்டின் முற்றத்தில் இறந்தவரின் உடலை வைத்து, அவரின் உடலின் பக்கத்தில் நிறைந்த நெல், குத்து விளக்கு ஏற்றி வைப்பர், வெற்றிலைப் பாக்கு, தேங்காய்ப் பழம் முதலியவற்றை ஒரு தட்டில் வைத்து விளக்கின்முன் வைக்கின்றனர். பிறகு, இறந்தவரைச் சுற்றி உறவினர்கள், ஊர்மக்கள் என அனைவரும் அவரின் பெருமைகளைக் கூறிகொண்டு அழுவார்கள்.

**நீராட்டுதல் (குளிப்பாட்டுத் தளம்)**

இறந்த வீட்டிற்கு உறவினர்கள் அனைவரும் வந்து சேர்ந்த பின்பு, அவர்களின் மகன், மகள் என்று இரத்தச் சொந்தம் உடையவர்கள், இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். நீர் தண்ணீர் வீட்டிற்கு வெளியே கொண்டு வந்து இறந்தவரின் உடலை உட்கார வைத்துக் கொண்டு அவரை நீராட்டுவார்கள். ஆணாக இருந்தால் முகச்சவரம் செய்வார்கள், பெண்ணாக இருந்தால் முகத்தில் மஞ்சள் பூசியும்

நீராட்டுகின்றனர். பெரும்பாலான பச்சைமலை மலையாளி மக்கள் இறந்தவரின் உடலை வெந்நீரைக் கொண்டு குளிப்பாட்டுகின்றனர். இதனை இறந்தவரின் மகன் அல்லது மகள் செய்கின்றனர்.இதனைக் கடைசி தண்ணீர் என்று கூறுகின்றனர். நீராட்டிய பின் இறந்தவர்கு புது ஆடைகளை அணிவிப்பார்கள். பெண்களாக இருந்தால் பிறந்த வீட்டிலிருந்து எடுத்து வரப்படும் புடவைகளை அணிவிப்பார்கள். பிறகு, அவர்களின் நெற்றியில் நாமம் போடுவதும் பெண்களுக்குக் குங்குமம் வைப்பதும் வழக்கமாக வைத்துள்ளனர். நாகரிக மாற்றத்தினால் சமவெளிப் பகுதிகளில் செய்வது போன்றும் இன்றும் செய்து வருகின்றன.

**பாடைக்கட்டுதல்**

இறந்தவரின் உடலைச் சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்வதற்கு பாடை கட்டப்படுகிறது. பாடை கட்ட ஊரில் உள்ள மக்களால் மூங்கில் வெட்டப்பட்டுக் கொண்டு. அதனைக் கொண்டே பாடையைத் தயார் செய்கின்றனர். வசதி உள்ளவர்கள் பாடை அமைப்புகளைப் பலவிதமாக அலங்கரித்தும் தேர் அமைப்புகளிலும் இறந்தவரின் உடலை எடுத்துச் செல்கின்றனர்.

சமவெளிப் பகுதிகளில் இருந்து இறந்தவர்களை எடுத்து வரும் பொழுது, ஊரின் எல்லையில் சேவல், கோழி, ஆடு, பன்றி என வசதிற்கு ஏற்றாற் போல் பலியிடுகின்றனர். எந்தவித தீய சக்திகளும் இறந்தவரின் உடலின் பின் வரக்கூடாது என்பதற்காகப் பலியிடபடுகின்றது எனக் கூறிகின்றனர். சமவெளிப் பகுதிகளில் இறந்தவரை வீட்டின் வாசலில் சிறிது நேரம் வைத்த பின்பு, இடுகாட்டிற்கு நேரடியாக எடுத்துச் செல்கின்றனர். எந்தவிதச் சடங்குமுறைகளும் வீட்டின் முன்பு செய்யாமல் இடுகாட்டில் செய்கின்றார்கள். இதனை இவர்களின் மரபுகளின் ஒன்றாகக் கருதுகின்றனர். அவ்வாறாக இறந்தவர்களுக்குப் பாடைக் கட்டும் வழக்கம் இம்மக்களிடம் இல்லை.

**பாடையை எடுத்துச் செல்லும் முறை**

பாடையினை இறந்தவர்களின் உற்ற பங்காளிகள் இரத்தச் சொந்தம் மற்றும் உடன்பிறந்தோர் போன்றவர்கள் மட்டும் பாடையினைத் தோளில் தூக்கிக் கொண்டு செல்கின்றனர். வீட்டைக் கடந்து தெருவின் முச்சந்தி வரை பிரதேதத்தின் (உடல்) தலை வீட்டை நோக்கியபடி தூக்கிச் செல்வார்கள். அதன்பின் தலைப் பாகத்தைச் சுடுகாடு நோக்கி இருப்பது போன்று மாற்றிப் பிடித்துத் தூக்கிச் செல்வர்கள்.

**இடுகாட்டில் செய்வன**

பச்சைமலை வாழ் மக்கள் பெரும்பாலானவர்கள் புதைக்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். நோய்வாய்ப் பட்டு இறந்தோர், விபத்தில் இறந்தோர் போன்றவர்களை மட்டும் எரிக்கிறார்கள். “சுடுகாட்டில் இறந்தவரின் உடலின் மீது சகோதரர், மாமன், மச்சன் உறவு முறைகளில் உள்ளோர்கள் கோடி என்னும் துணியை உடலின் மீது போடுவார்கள். பிறகு, வாய்க்கரிசிப் போடும் வழக்கம் உள்ளது” (அண்ணாதுரை, 55, ஊர் சாமியாடி, மருதூர், பச்சைமலை) எனத் தகவலாளர் கூறினார்.



தகவலாளி அண்ணாதுரை(55), ஊர் சாமியாடி, மருதூர்.

அதன்பின் வீட்டின் மூத்த மகன், குழியில் முதலில் மண் போடச் செய்வர். பிறகு, அவர்களின் உறவினர்கள் மண்ணைப் போடுகின்றனர். அக்குழியினை மண்ணால் மூடி மேடு

அமைக்கப்படுகிறது. பச்சைமலை மலையாளி மக்கள் இரண்டாம் நாள் குழியின் மேல் பால் ஊற்றி பத்தி ஏற்றி வைத்து, மாலைப் போட்டு அதனை வணங்க செய்யும் சடங்குமுறையும் காணப்படுகிறது. பிறகு, வசதிற்கு ஏற்றார்ப் போல் ஏழாம் நாள் அல்லது பதினாறாம் நாள்கள் என ஒற்றைபடை எண்களைக் கொண்ட நாட்களில் இறந்தவர்க்குப் பிடித்த உணவுகளைச் சமைத்து, அவர்களுக்கு படைத்து உறவினர்களும் உண்ணுகின்றனர்.

**அந்திமச் சடங்கு அறிமுகம்**

அந்திமச் சடங்கு என்பது மனிதன் இறந்தப் பிறகு உறவினர்கள், ஊர்மக்கள் என அனைவரும் இறந்தவர்க்குச் செய்யும் இறுதி நிகழ்வாகும். அந்திமம் - இறுதி, கடைசி என்றும் கூறுவர். இறந்தவரின் மறைவுக்குப் பிறகு ஒரு வருடம் கழித்துச் செய்யப்படும் இச்சடங்கு முறை வட்டாரத்திற்கும், சமூக மரபிற்கும் ஏற்றார்ப் போல் வெவ்வேறு பெயர்களில் சமூக மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது.

**அந்திமச் சடங்கு**

இறந்தோர் ஆவியைப் பச்சைமலை பழங்குடியினர் 'கருப்பு' மற்றும் 'சந்து' என்று குறிப்பிடுகின்றனர். " தாம் வாழ்ந்த வாழ்விடத்தைச் சுற்றியே அலைந்து கொண்டிருக்கும் சந்துகளுக்கு முறையான சடங்கு நடத்தி, மந்திரச் சடங்குமுறைகளைச் செய்து ஆவியை அமைதிப்படுத்துகின்றனர். அதற்கான உருவச் சிலை அல்லது கல்லில் அதனை ஏற்றி வழிப்படுவதன் வாயிலாக மட்டுமே, இறந்தோர் ஆவிகள் தமது குடும்பத்திற்கும், சமுதாய மக்களுக்கும் வழிகாட்டும் தெய்வங்களாக விளங்குகின்றது என்று மக்கள் கருதுகின்றனர்" இதனை, (பாலாஜி, 35, ஆண், விவசாயம், சேம்பூர்) எனத் தகவலாளர் கூறினார்.

பச்சைமலை மலையாளிகள் 'கருப்பு' அல்லது 'சந்து' என்னும் இறந்தோர் ஆவியை நிலைப்படுத்துவதற்கு முதலில் தங்களின் வாழ்விடத்தைச் சார்ந்த சாமியாடியை அழைத்துக் குறிக் கேட்பார்கள். சாமியாடி மந்திரங்கள் உச்சரித்துச் சோழிகளைக் குலுக்கிப் போட்டு, இறந்தோர் ஆவியுடன் தொடர்புகொள்கிறார், இறந்தோர் ஆவியும் சாமியாடி வாயிலாகத் தனது உருவத்தை எங்கு நிலைநிறுத்த வேண்டும், தனது விருப்பத்தினைச் சாமியாடிகள் மூலம் வெளிப்படுத்துவதாக இந்நிகழ்வு நடைபெறுகிறது.

"அதாவது, இறந்தவரின் விருப்பத்திற்கு ஏற்றார்ப் போல் இறந்தவரின் ஆவியினை மரத்திலோ அல்லது அவர்களின் பூர்விக நிலத்திலோ, தங்களின் முன்னோர்களின் உருவங்கள் என்று அவர்களுக்குப் பிடித்த இடங்களில், அவர் அவரின் உருவச் சிலைகளை நிறுவி வழிபட்டு வருகின்றனர் எனப் பச்சைமலை மலையாளிப் பழங்குடியினர் குறிப்பிடுகிறர் ( அருண், 35, ஆண், விவசாயம், டாப் செங்கட்டுப் பட்டி, 16.06.26 ).

இவர்கள் ஒரு வாருடாந்திரக் காலத்தில் ஊர்களில் நடக்கும் திருவிழாக்கள், திருமண நிகழ்வு என முக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் காணப்படுகின்றனர். ஒரு வருடம் முடிந்த பிறகு, அவர்களுக்குக் 'கருப்பு' அல்லது 'சந்துவிக்ரது' எனப்படும் நிகழ்வு நிறைவடைந்த பிறகே, ஊர் மக்களுடன் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்கின்றனர்.

**நிறைவாக,**

வாழ்வியல் சடங்குகள் அனைத்தும் ஒவ்வொரு இனக்குழு மக்களின் பண்பாட்டிற்கு ஏற்ப மாறுபட்டுக் காணப்படும். வாழ்வியல் சடங்குகள் தாயின் வயிற்றில் குழந்தை உருவானது முதல் இறக்கும் வரை பல்வேறு சடங்குமுறைகளைச் சார்ந்தே வாழ்வியல் சடங்குமுறை அமைகின்றது. இறந்து ஒரு வருடம் ஆன பின்பு இறந்தவர்களின் உறவினர்கள் அவர் இறந்த நாளில் இறந்தவரை நினைத்து வணங்குகின்றனர், இதனைத் ' 'திதி' ஆண்டு என்று கூறுவர். மனிதனின் வாழ்வியல் சுழற்சியில் பல சடங்குமுறைகளைச் சார்ந்து இருக்கும் மக்கள், அறிவியல் வளர்ச்சியினாலும் ,மனிதனின் பட்டறிவினாலும் காலத்திற்கு ஏற்றாற் போல் சடங்கு முறைகளில் பல மாறுதல்கள் உருவாகியது. பச்சைமலை வாழ் மலையாளிகள் தங்களின் முன்னோர்களின் பழக்கவழக்கங்களை இன்றும் பின்பற்றி வருகின்றனர், அவற்றிலும் இறப்புச் சார்ந்த சடங்குகளில் அவர்கள் நிகழ்த்தும் **கருப்பு** மற்றும் **சந்து விக்ரது** என்ற செயல் முறைகள்

சமவெளி மக்களைவிட, சற்றும் மாறுதல்களுடன் இன்றளவும் பச்சைமலை மக்களிடம் காணப்படுகின்றது.

**துணைநூற் பட்டியல்**


1. காந்தி, க., தமிழர் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை 1980
2. மகேசுவரன், சி., பண்பாட்டியல் ( பண்பாட்டியல் குறித்த முழுதளாவிய பார்வை) பாரதி புத்தகாலயம், சென்னை, 2025
3. மகேசுவரன், சி., பழங்குடி இனக்குழுவரைவியல், பாரதி புத்தகாலயம், சென்னை, 2025
4. ரகோத்தமன், ர., இந்தியாவின் பழங்குடிகள், சத்தியா எண்டர்பிரைஸ், சென்னை, 2022
5. ரெஜித்குமார், த., நாட்டுப்புற இயல், பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2017
6. வடிவேல் இன்பமோகன்., நாட்டார் வழக்காறுகள் சடங்குகளும் சமூக மரபுகளும், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2020


**தகவலாளர் பட்டியல்**

1. அண்ணாதுரை, 55, ஆண், பத்தாம் வகுப்பு, ஊர் சாமியாடி, மருதூர், 12.06.26
2. அருண், 35, ஆண், முதுகலை, விவசாயம், டாப் செங்கட்டுப் பட்டி, 16.06.26
3. விமல், 28, ஆண், 12 வகுப்பு, பள்ளியில் உணவு சமையால் செய்பவர், புத்தூர், 16.06.26
4. பாலாஜி, 35, ஆண், 10 வகுப்பு, விவசாயம், சேம்பூர், 16.06.26
5. ராகுல், 25, ஆண், 10 வகுப்பு, விவசாயம், சேம்பூர், 16.06.26

****